

நேற்று (03.01.2025) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட 6 அணைகளுக்கான "சிறந்த அணை பராமரிப்பு" விருதுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நீர்வளத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க. மணிவாசன், நீர்வளத்துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சா. மன்மதன், திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர் தயாளகுமார் ஆகியோர் உள்ளனர்.



நேற்று (03.01.2025) சென்னை, கிண்டி, கத்திபாரா பாலத்தின் கீழ், நகர்ப்புற சதுக்கத்தில் (Urban Square) குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் புதுதில்லி (கைவினைப்பொருட்கள்), அபிவிருத்தி ஆணையர் மற்றும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் சார்பில் நடைபெறும் மாநில அளவிலான காந்தி சில்ப் பஜார் கைவினைப்பொருட்கள் மற்றும் கைத்தறி துணிகள் பிரத்தியேக கண்காட்சி மற்றும் விற்பனை கண்காட்சியினை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர் ஏ.அமுதவள்ளி, தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகத்தின் நிர்வாக இயக்குநர் எஸ்.அமிர்தஜோதி, (கைவினைப்பொருட்கள்) தெற்கு மண்டலம் அபிவிருத்தி ஆணையர் லஷ்மன் ராவ் அத்துகுரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி திருக்கோயில்

# வைகுண்ட ஏகாதசி முன்னேற்பாடு பணிகள்!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஜன.4-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (03.01.2025) சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து இந்து சமய அறநிலையத்துறை, காவல்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, மின்சார வாரியம், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர கற்று வாரியம், தீயணைப்புத்துறை, போக்குவரத்துத்துறை உள்ளிட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். பின்னர், திருக்கோயில் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை பார்வையிட்டார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

108 திவ்யதேசங்களில் 84-வது திவ்ய தேசமாக போற்றப்படுகின்ற திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் இந்த ஆண்டு வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு வருகின்ற ஜனவரி 10 மற்றும் 11 ஆகிய இரண்டு நாட்களில் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் வருகை புரிவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த ஆண்டு போலவே இந்த ஆண்டும் சிறப்பு தரிசனக் கட்டணம் ரத்து செய்யப்படுகிறது. எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் அனைத்து பக்தர்களுக்கும் பொதுவான சாமி தரிசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. காவல்துறை சார்பில் 3 துணை ஆணையர்கள் தலைமையில் உதவி ஆணையர்கள், காவல் துறை ஆய்வாளர்கள் என ஒரு முறைக்கு 600 காவலர்கள் வீதம் 3 முறைகளில் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள உள்ளனர். திருக்கோயிலின் சுற்றுப்புறங்களில் 32 கண்காணிப்பு கேமராக்கள் கூடுதலாக பொருத்தப்பட உள்ளன.

திருக்கோயிலில் 5 இடங்களில் மருத்துவ முகாம்கள் அமைக்கப்படுவதோடு, நாள் முழுவதும் 2 ஆம்புலன்ஸ் வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்படும். பக்தர்கள் இலகுவாக தரிசனம் மேற்கொள்ளும் வகையில் வரிசை அமைப்பானது (கியூ) நீடிக்கப்படுவதோடு, 20 அடிக்கு ஓரிடத்தில் காவலர் ஒருவரை நியமனம் செய்து அனைத்து பக்தர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பாட்டில்கள் வழங்கப்படும். திருக்கோயிலின் திருக்குளம் அருகிலும் மற்றும் நரசிம்மர் சன்னதி பின்புறமும் 20 தற்காலிக கழிப்பிடங்கள் அமைக்கப்படுகிறது. மூத்தக் குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் கர்ப்பிணி பெண்கள் வைகுண்ட ஏகாதசி அன்று காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும், மதியம் 2 மணி முதல் 4 மணி வரையிலும் திருக்கோயிலின் பின்கோபுர வாசல் வழியாக சுவாமி தரிசனம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களுக்காக 8 மின்கல வண்டிகள் தயார் நிலையில் வைக்கப்படும்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் இணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் முதல் நிலை செயல் அலுவலர்கள் சிறப்புப்பணி அலுவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் குப்பைகளை உடனுக்குடன் அகற்றிட 100 தூய்மைப் பணியாளர்கள் சுழற்சி முறையில் பணியாற்றுவர்.

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு பரமபதவாசல் காலை 4.30 மணிக்கு திறக்கப்படும். அதற்கான தரிசனக் கட்டண சீட்டு ரூ.500/-க்கு ஆன்லைன் மூலம் வருகின்ற ஜனவரி 6 ஆம் தேதி பெற்றுக் கொள்ளலாம். இதன்மூலம் 1,500 கட்டணச் சீட்டுகள் வழங்கப்படும். மேலும், 500 நபர்கள் முதலில் வருவோருக்கு முன்னுரிமை அடிப்படையில் பரமபதவாசல் தரிசனம் செய்ய கட்டணமின்றி அனுமதிக்கப்படுவர். பக்தர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு என்.கே.டி. பள்ளி மற்றும் இராணி மேரி கல்லூரியின் வாகன நிறுத்தங்கள் அமைக்கப்படுகிறது. திருக்கோயில் அருகில் 2 தீயணைப்பு வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டள்ளது. கடந்த ஆண்டுகளில் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் சிறு குறைகளையும் நிவர்த்தி செய்து, எவ்வித சிறு அசம்பாவிதமும் இன்றி பக்தர்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் சிறப்பாக அமைந்திட அனைத்து ஏற்பாடுகளும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், மயிலாப்பூர் காவல்துறை துணை ஆணையர் டி.ஹரி கிரண், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, துணை ஆணையர் திருமதி சி.நித்யா, காவல் உதவி ஆணையர் என்.இளங்கோவன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 2024-2025ஆம் ஆண்டு நிதிநிலை அறிவிப்பின்படி

# சென்னை மாநகராட்சியில் கர்ப்பிணி தாய்மார்களுக்கான நல உதவி மையம்!

## மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன.04

மேயர் அவர்களின் 2024-25ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் பாதிப்பு மிகுந்த கர்ப்பிணித் தாய்மார் களுக்கான நல உதவி மையத்தினை (High Risk Mother Help Desk) மேயர் ஆர்.பிரியா நேற்று (03.01.2025) ரிப்பன் கட்டட வளாக அலுவலகத்தில் தொடங்கி வைத்து, செயல்பாடுகளைப் பார்வையிட்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 140 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 16 நகர்ப்புர சமுதாய நல மையங்கள், 24 மணி நேரமும் இயங்கும் 3 மகப்பேறு மருத்துவமனைகள், 1 தொற்றுநோய் மருத்துவமனை, 140 நகர்ப்புர நல வாழ்வு மையங்கள் என மொத்தம் 300 மருத்துவ மையங்கள் மூலம் பொதுமக்களுக்கு சுகாதார சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 54,678 கர்ப்பிணித் தாய்மார்கள் பதிவு செய்துள்ளனர். இவர்களில் பாதிப்பு மிகுந்த கர்ப்பிணித் தாய்மார்கள் 11,765 நபர்கள் ஆவர். மேலும், மாநகராட்சி மருத்துவமனைகளில் ஒரு மாதத்திற்கு 750 முதல் 800 வரை பிரசவங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஆண்டுதோறும் பதிவு செய்யப்படும் கருவுற்ற தாய்மார்களில் 30 சதவிகிதம் பாதிப்பு மிகுந்த (அ) அதிக ஆபத்துள்ள தாய்மார்களாக கருதப்படுகிறார்கள். இவர்களை கண்காணிக்கும் வகையில் பாதிப்பு மிகுந்த (அ) அதிக ஆபத்துள்ள கர்ப்பிணி தாய்மார்களுக்கான நல உதவி மையம் அமைக்கப்படும் என மாண்புமிகு மேயர் அவர்களின் 2024 25ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில், பாதிப்பு மிகுந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கான நல உதவி மையம் மேயர் அவர்களால் இன்று தொடங்கி வைக்கப்பட்டது. இவ்வுதவி மையத்தின் மூலமாக கருவுற்ற தாய்மார்களுக்கு அறிவுரைகளும், ஆலோசனைகளும் வழங்கப்பட உள்ளது.

இந்த உதவி மையத்தில் தொடர்பு கொள்ளும் பாதிப்பு மிகுந்த (அ) அதிக ஆபத்துள்ள கர்ப்பிணிகளின் விவரங்கள் சம்பந்தப்பட்ட நகர்ப்புர சுகாதார செவிலியர்கள் மற்றும் துணை மருத்துவ செவிலியர்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அவர்கள் சம்பந்தப்பட்ட கர்ப்பிணி தார்யமார்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்களுக்கு தேவைப்படும் முறையான பரிசோதனை (ம) சிகிச்சை முறை பற்றி விளக்கிக் கூறி, அவர்கள் உரிய சிகிச்சை பெறுவதை உறுதி செய்து தொடர்ந்து கண்காணித்து வருவார்கள். மேலும், அவர்களின் பிரசவ நேரத்தில் போது சிறப்பு மருத்துவமனையில் பிரசவிக்கவும் அறிவுறுத்தப்படுவர். கர்ப்பக் கால நோய் கண்டறிதல் முதல், பிரசவம் (ம) பிரசவ கால பின் கவனிப்புமுறை காலம் வரை தாய் மற்றும் சேய் தொடர்ந்து கண்காணிக்கப்படுவர்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 486 நகர்ப்புர சுகாதார செவிலியர்கள் மற்றும் 300 துணை மருத்துவ செவிலியர்கள் என மொத்தம் 786 செவிலியர்கள் உள்ளனர்.

இந்தக் கண்காணிப்பு மூலம் தாய் மற்றும் சேய் இறப்பு விகிதம் குறைக்கப்படும். கருத்தரித்த தாய் ஆரோக்கியமான குழந்தையை பிரசவிக்க வழிவகுக்கும். மேலும், கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கான உணவுமுறை மற்றும் அவர்களுக்கு ஏற்படும் நோய்கள், சிக்கல்கள், அதற்கான சிகிச்சை முறைகள் குறித்து குறிப்பாக, உயர் இரத்த அழுத்தம், பிரசவகால நீரிழிவு நோய், இருதய நோய், வலிப்பு, இரத்த சோகை, (8 urm), ஆஸ்துமா, முந்தைய அறுவை சிகிச்சை, தைராய்டு, செயற்கை முறை கருத்தரிப்பு, 18 வயதிற்குள்ளாக மற்றும் 35 வயதிற்கு மேல் கருவுறுதல் உட்பட்ட முதல் கருத்தரிப்பு, இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட கருத்தரிப்பு, முந்தைய (அ) ஒன்றுக்கு மேற்பட்ட கருச்சிதைவு ஏற்பட்ட தாய்மார்கள் மற்றும் பல நோய்கள் பற்றிய சிக்கல்கள் கண்காணிக்கப்பட்டு அதற்கான தடுப்பு முறைகள் குறித்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு விளக்கப்படும்.

இதன் மூலம் ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய தாய்மார்கள் பெயர் பட்டியலினை Picme இணையதள வாயிலாக பதிவிறக்கம் செய்து, அவர்கள் இம்மையத்தின் தொலைபேசியின் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறார்கள். மேலும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு உடல் உபாதைகள் ஏதேனும் தெரிவிக்கப்பட்டால் அத்தகவல் உரிய நகர சுகாதாரச் செவிலியருக்கு உடனடியாக தெரிவிக்கப்பட்டு, தொடர் கண்காணிப்புகள் மற்றும் மேல் சிகிச்சைகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுவார்கள்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந. இராமலிங்கம், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி, நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர் எஸ். பானுமதி, மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தாய்நாட்டின் விடுதலைக்காக வெகுண்டெழுந்த

# தியாகச் சுடர்களாம் வீரபாண்டிய கட்டபொம்மன் - வீரமங்கை வேலுநாச்சியார் புகழ் வாழ்க!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஜன.04

தாய்நாட்டின் விடுதலைக்காக வெகுண்டெழுந்த தியாகச் சுடர்களாம் வீரபாண்டிய கட்டபொம்மன் – வீரமங்கை வேலுநாச்சியார் புகழ் வாழ்க என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**ஆதிக்கத்துக்கு அடிபணியும் பேச்சுக்கே இடமில்லை எனத் தாய்நாட்டின் விடுதலைக்காக வெகுண்டெழுந்த தீரச்சுடர்களாம் வீரபாண்டிய கட்டபொம்மன் மற்றும் வீரமங்கை வேலுநாச்சியார் ஆகியோரின் புகழ் வாழ்க.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.





## கிண்டி சிட்கோ வளாகத்தில் ரூ.475 கோடி மதிப்பீட்டில்

# 8 புதிய தொழிற்பேட்டைகள் - 2 அடுக்குமாடி தொழில் வளாகங்கள் - 2 தங்கும் விடுதிகள்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

சென்னை, ஜன.4-

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் சார்பில் ரூ.475 கோடி மதிப்பில் 8 புதிய தொழிற்பேட்டைகள், 2 அடுக்குமாடி தொழில் வளாகங்கள் 2 தொழிலாளர் தங்கும் விடுதிகள் புதியதாக பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தெரிவித்தார்.

சென்னை, கிண்டி சிட்கோ வளாகத்தில் நேற்று (3.1.2025) சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி கழகத்தால் நிறைவேற்றப்படும் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் பேசியதாவது "தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச் கழகத்தின் மூலம், 512 ஏக்கர் பரப்பளவில், ரூ. 295 கோடி திப்பீட்டில். 8 புதிய தொழிற்பேட்டைகளும், கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில், ரூ.150 கோடியே 68 லட்சம் மதிப்பில் 264 தொழில் கூடங்களுடன், அடுக்குமாடி தொழில் வளாகங்களும், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ. 29 கோடியே 40 லட்சம் மதிப்பில், 810 தொழிலாளர்கள் தங்குவதற்கு தொழிலாளர் தங்கும் விடுகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது

248 ஏக்கர் பரப்பளவில், ரூ. 115 கோடியே 533 லட்சம் மதிப்பீடில் 8 புதிய தொழிற்பேட்டைகளும், கிருஷ்ணகிரி - ஓசூர் மதுரை கே. புதூர், சக்திமங்கலம், கோயம்புத்தூர் - குறிச்சி ஆகிய இடங்களில் ரூ. 183 கோடியே 96 லட்சம் மதிப்பில், 441 அடுக்குமாடி தொழில் வளாகங்களும், கோயம்புத்தூர் - குறிச்சியில், ரூ. 22 கோடி மதிப்பீட்டில், 510 தொழிலாளர்கள் தங்கும் விடுதிக்கான பணிகள் நடைபெற்று வருகிறது இப்பணிகளை ஓரிரு மாதங்களில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

சேலம் மாவட்டம் கொலுசு உற்பத்தி அடுக்குமாடி தொழில் வளாகத்தின் கட்டுமான பணிகள் 95% நிறைவடைந்துள்ளது இந்த மாதம் இறுதிக்குள் பணியை முடிக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்களால் கோயம்புத்தூர் மாவட்டத்தில் புதிதாக அறிவிக்கப்பட்ட தங்க நகை தொழில் பூங்கா மற்றும் பொது வசதி மையத்திற்கான பணிகளை விரைந்து தொடங்கிட வேண்டும். துல்லிய உற்பத்தி பெருங்குழுமம், மருந்தியல் பெருங்குழுமம் ஆகியவற்றின் 2 ஆம் கட்ட பணிகளை துவங்கி குறித்த காலத்தில் முடிக்க வேண்டும். கிண்டி, அம்பத்தூர் அடுக்குமாடி தொழில் வளாகங்களை காலதாமதம் இன்றி குறுந் தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்க வேண்டும். தொழிற்பேட்டை, கோயம்புத்தூர் குறிச்சி தொழில் பேட்டை ஆகியவற்றில் உள்ள தொழிலாளர் தங்கும் விடுதிகளை, உடனடியாக தொழிலாளர்களுக்கு ஒதுக்க வேண்டும். தூத்துக்குடி மாவட்டம் லிங்கம்பட்டி புதிய தொழில் பேட்டை, திருவாரூர் வேளாண் பொருட்களுக்கான தொழிற்பேட்டை, திருநெல்வேலி மாவட்டம் முத்தூர் புதிய தொழில் பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டம் வையாவூர் புதிய தொழில் பேட்டை ஆகியவற்றிக்கு மனை விலைகளை நிர்ணயித்து விரைவில் திறப்பு விழாவிற்கு கொண்டு வர வேண்டும். குறுங்குழுமங்களுக்கான பொது வசதி மைய கட்டிடங்களை விரைந்து முடித்து, இயந்திரங்களை கொள்முதல் செய்து நிறுவ வேண்டும். அதற்கு தேவையான அனைத்து அரசு துறை அனுமதிகளையும் உரிய நேரத்தில் பெற்று மூன்று மாத காலத்திற்குள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

சிட்கோ தொழிற்பேட்டைகளில் உள்ள காலி மனைகளை உடனடியாக தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தொழில் மனைகள் ஒதுக்கப்பட்டு, தொழில் தொடங்காத காலி மனைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தொழிற்பேட்டையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். தொழில் மனைகளுக்கான தொகையினை உரிய நேரத்தில் வசூலிக்க வேண்டும். பராமரிப்பு கட்டணங்களை வசூலித்து தொழிற்பேட்டைகளை தூய்மையாக பராமரிக்க வேண்டும்.என தெரிவித்தார்.

ஆய்வுக் கூட்டத்தில். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, அரசு தலைமை கூடுதல் செயலாளர், அதுல் ஆனந்த், முதன்மை செயலாளர், சிட்கோ மேலாண்மை இயக்குநர் ஆ.கார்த்திக், பொது மேலாளர் தனலிங்கம், கண்காணிப்பு பொறியாளர் (பொறுப்பு) சோம சுந்தரம் அவர்களே, துறை உயர் அலுவலர்கள் மற்றும் மாவட்ட கிளை மேலாளர்கள் உடன் இருந்தனர்.

